**அக்டோபர் – 27**

# TNPSC துளிகள்

- சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் (RGGGH) ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைக் குழுவானது 28 வயது இளைஞருக்கு கை குறுக்கு மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டது.
    - இது போன்ற அறுவை சிகிச்சை அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுவது இது முதல் முறை மற்றும் இந்தியாவில் இது இரண்டாவது முறையாகும், மேலும் உலகளவில் பதிவான நான்காவது இத்தகைய அறுவை சிகிச்சை இது ஆகும்.
- சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் புதுப்பிக்கப்பட்ட 58 ஏக்கர் பரப்பளவிலான தொல்காப்பியப் பூங்காவை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வரலாற்றாசிரியரும் யேல் பல்கலைக்கழக பேராசிரியருமான சுனில் அம்ரித், தனது "The Burning Earth: An Environmental History of the Last 500 Years" படத்திற்காக 2025 ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் அகாடமி புத்தக பரிசை வென்றுள்ளார்.
- ஸ்பெயினின் காண்டோ விமான தளத்தில் ஸ்பெயின் விமானப்படை நடத்தும் பன்னாட்டு விமானப் போர் பயிற்சியான ஓஷன் ஸ்கை 2025 பயிற்சியில் இந்திய விமானப் படை (IAF) பங்கேற்கிறது.
    - இதில் பங்கேற்கும் முதல் நேட்டோ அல்லாத நாடு இந்தியா ஆகும்.
- கொச்சியில் உள்ள கொச்சின் ஷிப்யார்ட் லிமிடெட் (CSL) நிறுவனத்தினால் கட்டமைக்கப் பட்ட குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் எட்டு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல்களில் (ASW SWC) முதலாவதான 'மாஹே', இந்தியக் கடற் படையிடம் வழங்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சீர்காழி கோயிலில் செப்புத் தகடுகள்




- தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது (TNSDA), தேவாரப் பாடல்கள் பொறிக்கப் பட்ட 483 செப்புத் தகடுகளை ஆய்வு செய்யத் தொடங்கியுள்ளது.
- மயிலாடுதுறை மாவட்டத்தின் சீர்காழியில் உள்ள சட்டைநாதர் கோயில் என்றும் அழைக்கப் படும் தோணியப்பர் கோயிலின் மேற்கு கோபுர நுழைவாயிலுக்கு அருகில்

இந்தத் தகடுகள் மற்றும் 23 பஞ்சலோகச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

- ஒவ்வொரு தகட்டிலும், இருபுறமும் கல்வெட்டுகள் மற்றும் குறிப்பிட்ட தொடர் வரிசை இல்லாமல் வெவ்வேறு எழுத்தாளர்களால் பொறிக்கப்பட்ட 10 முதல் 12 வரி பாடல்கள் உள்ளன.
- சிவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தப் பாடல்கள், சைவ சமய துறவி கவிஞர்களான திருநாவுக்கரசர் (அப்பர்), திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகியோரால் இயற்றப் பட்டன.

# தேசியச் செய்திகள்


## செயற்கை நுண்ணறிவு மருத்துவக் குறிப்பேடு




- சுகாதார அமைப்புகளில் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடுகள் குறித்த கருத்தாக்கங்களுக்கான உலகளாவிய அழைப்பை மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் WHO அறிவித்துள்ளது.
- உலகளாவியத் தெற்கு நாடுகள் முழுவதும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சுகாதாரப் பயன்பாடுகள் குறித்த குறிப்பேட்டில் ஓர் அத்தியாயத்தைச் சேர்க்க குறிப்பிட்ட உள்ளீடுகள் வரவேற்கப் படும்.
- வெற்றிகரமான AI தீர்வுகளை வெளிக் கொணர்ந்து மேம்படுத்துவதற்கு கொள்கை வகுப்பாளர்கள், புதுமையாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான ஒரு குறிப்புப் புத்தகமாக செயல்படுவதை இந்தக் குறிப்பேடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் AI வளர்ச்சி

- செயற்கை நுண்ணறிவில் இந்தியாவின் ஒட்டு மொத்த மற்றும் புதிய முதலீடு 2025 ஆம் ஆண்டில் 20 பில்லியன் டாலரை எட்டியுள்ளது.
- இதில் அரசு மற்றும் தனியார் துறைப் பங்களிப்புகளும் அடங்கும்.
- 2013 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் செயற்கை நுண்ணறிவில் இந்தியாவின் மொத்தத் தனியார் முதலீடு 11.1 பில்லியன் டாலராக இருந்தது.
- அரசாங்க ஆதரவுடன், ஒருங்கிணைந்த முதலீடு ஆனது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 12.3 பில்லியன் டாலரை எட்டியது.




# சர்வதேசச் செய்திகள்

## முக்கிய கனிம விநியோகச் சங்கிலி கட்டமைப்பு




- அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முக்கிய கனிம விநியோகச் சங்கிலிகளுக்கான பிணைக்கப்படாத கட்டமைப்பில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் ஆனது அத்தியாவசிய கனிமங்களை சுரங்கப்படுத்துதல் மற்றும் செயல் முறைக்கு உட்படுத்துதல் ஆகியவற்றில் கூட்டு, பொது மற்றும் தனியார் முதலீடுகளை உள்ளடக்கியது.
- அனுமதி வழங்கலை ஒழுங்குபடுத்துதல், விலை வரம்புகளை ஏற்றல் மற்றும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளிலிருந்து உள்நாட்டுச் சந்தைகளைப் பாதுகாப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புதிய உத்தி சார் EU-இந்தியச் செயல்பாட்டு நிரல்

- ஐரோப்பிய சபையானது, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் தேதியன்று ஐரோப்பிய ஒன்றியம்-இந்திய உத்தி சார் செயல்பாட்டு நிரலை அங்கீகரித்தது.
- செயல்பாட்டு நிரல் ஆனது செழுமை மற்றும் நிலைத்தன்மை, தொழில்நுட்பம் மற்றும்

புதுமை, காவல் மற்றும் பாதுகாப்பு, இணைப்பு மற்றும் உலகளாவியப் பிரச்சினைகள் மற்றும் நடவடிக்கைகளை செயல்படுத்துதல் ஆகிய ஐந்து முன்னுரிமைப் பிரிவுகளை அடையாளம் காட்டுகிறது.

- இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் (EU) 1962 ஆம் ஆண்டில் அரசுமுறை உறவுகளை ஏற்படுத்தி 2004 ஆம் ஆண்டில் ஓர் உத்தி சார் கூட்டாண்மையாக மேம்படுத்தப்பட்டன.
- இருதரப்பு வர்த்தகம் ஆனது 2024 ஆம் ஆண்டில் 120 பில்லியன் யூரோ மதிப்பினை எட்டியது, 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இந்தியாவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒட்டு மொத்த அந்நிய நேரடி முதலீடு 107.27 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.




## 2025 ஆம் ஆண்டில் இத்தாலியின் பிறப்பு விகிதம்





- ISTAT எனும் இத்தாலியின் தேசியப் புள்ளிவிவரங்கள் நிறுவனத்தின் படி, இந்த ஆண்டு இத்தாலியில் மிகக் குறைந்த பிறப்பு எண்ணிக்கைப் பதிவாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டில், 370,000 பிறப்புகள் மட்டுமே பதிவாகின என்ற நிலையில் இது 1861 ஆம் ஆண்டில் இத்தாலி ஒருங்கிணைக்கப் பட்டதிலிருந்து மிகக் குறைவான பதிவாகும் என்பதோடு, இது தொடர்ந்து 16 ஆண்டுகள் சரிவைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை, 2024 ஆம் ஆண்டின் இதே

காலகட்டத்துடன் ஒப்பிடும்போது பிறப்புகள் கிட்டத்தட்ட 6.3% குறைந்து 198,000 க்கும் குறைவாக இருந்தன.

- 2024 ஆம் ஆண்டில் 1.18 ஆக இருந்த கருவுறுதல் விகிதம் ஆனது 2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ஒரு பெண்ணுக்கு 1.13 குழந்தைகளாகக் குறைந்தது.
- 55 முதல் 64 வயதுக் குழுவினரின் எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டில் 70% ஆகவும், 65 முதல் 74 வயதுக் குழுவினர் 16% ஆகவும் உயர்வர் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒழித்தல்- ஃபிஜி

- ஃபிஜி நாடு ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக இருந்த கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒழித்ததற்காக உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரத்தினைப் பெற்று உள்ளது.
- கருவிழித் தொற்றுப் பாதிப்பு / டிராக்கோமா என்பது புறக்கணிக்கப்பட்ட ஒரு வெப்ப மண்டல நோய் (NTD) மற்றும் உலகளவில் பார்வைத் திறன் இழப்பிற்கான முன்னணி தொற்று காரணமாகும்.
- கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒழித்த 26வது நாடு ஃபிஜியாகும் என்ற நிலையில் மேலும் குறைந்தது ஒரு NTD பாதிப்பினை நீக்கிய 58வது நாடாகும்.
- கிளமிடியா டிராக்கோமாடிஸ் என்ற ஒரு பாக்டீரியாவால் ஏற்படுகின்ற டிராக்கோமா தனிப்பட்ட தொடர்பு, மாசுபட்ட மேற்பரப்புகள் மற்றும் ஈக்கள் மூலம் பரவுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## வைப்புதாரர்களுக்கான புதிய நியமன முறை

- வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) சட்டம், 2025 ஆனது, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது.
- நியமனங்கள் தொடர்பான சட்டத்தின் பிரிவுகள் 10, 11, 12 மற்றும் 13, 2025 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.
- வைப்புத்தொகையாளர்கள் வங்கிக் கணக்குகள், பாதுகாப்பான காப்பில் உள்ள பொருட்கள் மற்றும் பாதுகாப்புப் பெட்டகங்களுக்கு நான்கு நபர்களைப் பொறுப்பாளர்களாக பரிந்துரைக்கலாம்.

- பரிந்துரைகளை ஒரே நேரத்தில் அல்லது தொடர்ச்சியாகவும் செய்யலாம் என்ற நிலையில் மேலும் ஒவ்வொரு பொறுப்பாளர்களின் பங்கும் தெளிவாகக் குறிப்பிடப் பட வேண்டும்.
- தொடர்வரிசைப் பரிந்துரைகளில், அடுத்த பொறுப்பாளர் முதன்மை பொறுப்பாளரின் மரணத்திற்குப் பிறகுதான் முதன்மை பொறுப்பினை ஏற்பார்.
- இந்தச் சட்டம் ஆளுகையை வலுப்படுத்துதல், வைப்புதாரர் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் உரிமை கோரல் தீர்வுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இரட்டை வால்நட்சத்திரம்




- C/2025 R2 (SWAN) மற்றும் C/2025 A6 (Lemmon) இரண்டு அரிய வால் நட்சத்திரங்கள்


இந்தியா முழுவதும் புலப்படும்.

❖ SWAN என்ற வால் நட்சத்திரம் சுமார் 20,000 ஆண்டுகளுக்கு சூரிய மண்டலத்திற்குத் திரும்பாது, அதே நேரத்தில் Lemmon வால் நட்சத்திரம் அடுத்ததாக 3175 ஆம் ஆண்டில் தோன்றும்.

❖ Lemmon வால் நட்சத்திரம் தற்போது பிரகாசமாக உள்ளது என்ற நிலையில் அதன் அளவு 4.5 ஆகும்.

❖ Lemmon ஆனது பூட்ஸ் விண்மீன் திரளிற்கு அருகில் வடமேற்கில் தோன்றுகிறது, அதே நேரத்தில் SWAN தெற்கு வானத்தில் தனுசு விண்மீன் திரளிற்கு மேலே தெரியும்.

## கூகுளின் வில்லோ சில்லு




❖ கூகுள் குவாண்டம் AI நிறுவனத்தின் வில்லோ சில்லு, முதன்முதலில் சரிபார்க்கக் கூடிய குவாண்டம் பலனை அடைந்துள்ளது.

❖ அதன் குவாண்டம் எக்கோஸ் படிமுறை ஆனது சிறந்த வழக்கமான மீக்கணினி படி முறையை விட 13,000 மடங்கு வேகமானதாகும்.

❖ குவாண்டம் எக்கோஸ் படிமுறை என்பது அணு காந்த அதிர்வினை (NMR) பயன்படுத்தி மூலக்கூறுகளில் அணுக்களில் உள்ள தொடர்புகளை ஆய்வு செய்ய உதவும் ஓர் ஒழுங்கற்ற நேர இணைப்பி (OTOC) ஆகும்.

❖ அதன் முடிவுகள் சரி பார்க்கக் கூடியவை, அதாவது அவை மற்ற குவாண்டம் கணினிகளால் மீண்டும் உருவாக்கப்படலாம் அல்லது சோதனை ரீதியாக மீண்டும் உறுதிப்படுத்தப் படலாம்.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## 2021–25 ஆம் ஆண்டில் மிகப்பெரிய வன கார்பன் உறிஞ்சு பகுதி

❖ 2021–25 வரையிலான ஆண்டுகளில் முறையே 1,150 Mt $CO_2$, 840 Mt $CO_2$ மற்றும் 410 Mt $CO_2$ வருடாந்திர நீக்கங்களைப் பதிவு செய்து ரஷ்யா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவை

வன நிலத்தில் உலகளாவிய கார்பன் பிரித்தெடுப்பில் முன்னிலை வகித்துள்ளன.

- ❖ பிரேசில் (1,420 Mt $CO_2$), காங்கோ ஜனநாயகக் குடியரசு (160 Mt $CO_2$) மற்றும் பெரு (130 Mt $CO_2$) போன்ற நாடுகளில் நிகர வன மாற்றத்தின் காரணமாக மிகப்பெரிய உமிழ்வு பதிவானது.
- ❖ ஒட்டு மொத்தமாக, இந்த காலக் கட்டத்தில் உலகளாவிய காடழிப்பில் முதல் பத்து நாடுகள் 70 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினைக் கொண்டிருந்தன.
- ❖ 2021 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஆண்டிற்கு சராசரியாக 150 மெட்ரிக் டன் $CO_2$ வாயுவினை நீக்கியதுடன் வனத்தின் கார்பன் பிரித்தலில் இந்தியா உலகளவில் நான்காவது இடத்தில் உள்ளது.
- ❖ பூமியின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு (32 சதவீதம்) ஆக, தோராயமாக 4.14 பில்லியன் ஹெக்டேர்கள் பரப்பில் காடுகள் அமைந்துள்ளன.

Figure 6: Average greenhouse gas emissions from net forest conversion (2021–2025), top countries




## மத்திய ஆசியப் பாலூட்டிகள் வளங்காப்பு முன்னெடுப்பு





- ❖ மத்திய ஆசியப் பாலூட்டிகள் முன்னெடுப்பு (CAMI) என்பது புலம்பெயர்ந்த காட்டு விலங்குகளின் பாதுகாப்பு உடன்படிக்கையின் (CMS) கீழான ஒரு பன்னாட்டு வளங் காப்புத் திட்டமாகும்.

- 2014 ஆம் ஆண்டில் ஈக்வடாரின் குயிட்டோவில் நடைபெற்ற CMS உடன்படிக்கையின் 11வது பங்குதாரர்கள் (COP11) மாநாட்டில் இது தொடங்கப்பட்டது என்பதோடு மேலும் 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் காந்திநகரில் நடைபெற்ற COP13 மாநாட்டில் திருத்தப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது மத்திய ஆசியா முழுவதும் பதினேழு இடம்பெயர்வு மற்றும் இடம் விடு இடம் மாறுகின்ற பாலூட்டி இனங்களைப் பாதுகாக்கிறது.
- முதன்மை இனங்களில் பனிச் சிறுத்தை, சைகா மான், காட்டு ஒட்டகம், புகாரா மான் மற்றும் பாரசீக சிறுத்தை ஆகியவை அடங்கும்.
- CAMI ஆனது பன்னாட்டு ஒத்துழைப்பு, தரவுப் பகிர்வு மற்றும் நேரடியான நடமாட்டத் தடைகளை நீக்குதல் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.


# மாநிலச் செய்திகள்

## குஜராத்தில் ஹரப்பன் சகாப்த சத்திரம்




- குஜராத்தின் கட்ச்சில் உள்ள கோட்டாடா பட்லியில் 4,000 ஆண்டுகள் பழமையான சத்திரம் / கேரவன்செராய் ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த இடம் கிமு 2300-1900 ஆம் காலக் கட்டத்தின் போதான சிந்து சமவெளி நாகரிகத்தினைச் சேர்ந்தது.
- அகழ்வாராய்ச்சிகளில் வலுவூட்டப்பட்ட சுவர்கள், கோட்டைகள், முற்றங்கள், விலங்கு பாதுகாப்பு அடைப்புகள் மற்றும் பல அறைகள் வெளிக்கொணரப்பட்டன.
- இந்தச் சத்திரம் ஆனது வணிகர்களுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் பாதுகாப்பை வழங்கி ஒரு தங்குமிடமாக செயல்பட்டது.
- மட்பாண்டங்கள், உணவு எச்சங்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளிலிருந்து வரும் பொருட்கள் ஆகியவை அடங்கிய கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் வர்த்தக நடவடிக்கைகளைக் காட்டுகின்றன.

### ஜம்மு மற்றும் காஷ்மீர் தர்பார்




- தர்பார்/அரசவை இடமாற்றம் என்பது கோடைகால தலைநகரான ஸ்ரீநகருக்கும் குளிர்கால தலைநகரான ஜம்முவுக்கும் இடையிலான அரசு அலுவலகங்களின் பருவ கால மாற்றமாகும்.
- 150 ஆண்டுகளுக்கும் மேலான இந்தப் பாரம்பரியமானது, 1872 ஆம் ஆண்டு மகாராஜா ரன்பீர் சிங்கால் அறிமுகப்படுத்தப் பட்டது.
- நான்கு ஆண்டுகள் இடைநிறுத்தத்திற்குப் பிறகு 2025 ஆம் ஆண்டில் இது மீண்டும் புதுப்பிக்கப் பட்டது.
- ஸ்ரீநகர் அலுவலகங்கள் அக்டோபர் 31 ஆம் தேதியன்று மூடப்பட்டு நவம்பர் 03 அன்று ஜம்முவில் மீண்டும் திறக்கப்படும்.
- கடுமையான வானிலை இருந்த போதிலும் ஜம்மு, காஷ்மீர் மற்றும் லடாக் முழுவதும் ஆளுகையை இந்த நடைமுறை உறுதி செய்கிறது.
- இதற்கு வருடாந்திரச் செலவினம் சுமார் 200 கோடி ரூபாயாகும் என்பதோடு மேலும் இந்த நடவடிக்கை ஜம்முவின் பொருளாதாரத்தை ஆதரித்து, அதன் பாரம்பரியத்தைப் பாதுகாக்கிறது.
- மகாராஷ்டிரா மற்றும் இமாச்சலப் பிரதேசத்திலும் இதே போன்ற இரட்டை தலைநகர அமைப்புகள் உள்ளன.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ஏக்நாத் சிட்னிஸ் மறைவு

- பத்ம பூஷண் விருது பெற்ற பேராசிரியர் ஏக்நாத் வசந்த் சிட்னிஸ் காலமானார்.
- டாக்டர் விக்ரம் சாராபாயின் நெருங்கிய துணைவராக இருந்த சிட்னிஸ், இஸ்ரோவாக மாறிய இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழுவை (INCOSPAR) வடிவமைக்க

உதவினார்.

- இந்தியாவின் முதல் ஏவு வாகன ஏவுதல்களுக்காக கேரளாவில் உள்ள தும்பாவைத் தேர்ந்தெடுத்தார் என்பதோடு பின்னர் ஸ்ரீஹரிகோட்டாவில் ஓர் ஏவுதளத்தை நிறுவ அவர் உதவினார்.
- 1975–76 ஆம் ஆண்டில் சிட்னிஸ் செயற்கைக் கோள் வழித் தொலைக்காட்சி வழி காட்டல் ஒளிபரப்பு பரிசோதனையை (SITE) வழி நடத்தினார் என்பதோடு நாசாவின் ATS-6 செயற்கைக் கோளைப் பயன்படுத்தி சுமார் 2,400 கிராமங்களுக்கு இது கல்வித் திட்டங்களைக் கொண்டு வந்தது.
- அவர் இந்தியத் தலைமைச் செய்தி முகமையின் தலைவராகவும் இருந்தார் மற்றும் சாவித்ரிபாய் புலே புனே பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் இருந்தார்.



# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஈயநஞ்சேறல் தடுப்பு வாரம் 2025 - அக்டோபர் 19/25





- இது முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் WHO மற்றும் UNEP ஆகியவற்றினால் அனுசரிக்கப் பட்டது.
- உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், ஈய வெளிப்பாட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "No safe level: act now to end lead exposure" என்பதாகும்.
- ஈயம் என்பது மூளை மற்றும் உடலுக்கு, குறிப்பாக இளம் குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் ஒரு நச்சு உலோகமாகும்.

## காவல் துறை நினைவு தினம் 2025 - அக்டோபர் 21

- பணியின் போது தங்கள் உயிரைத் தியாகம் செய்த காவல்துறையினரைக் கௌரவிப்பதற்காக இது முதன்முதலில் 1960 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் தேதியன்று லடாக்கின் ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் சீனப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட பத்து இந்திய காவல் துறையினரின் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- உள்நாட்டு அமைதி மற்றும் ஒழுங்கைப் பேணுவதில் காவல் படைகளின் தைரியம், அர்ப்பணிப்பு மற்றும் சேவையை இந்த நாள் எடுத்துரைக்கிறது.




## உலக அயோடின் குறைபாடு தினம் 2025 - அக்டோபர் 21




- 1990 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான உலக உச்சி மாநாடு ஆனது அயோடின் குறைபாடு கோளாறுகளைத் தடுப்பதன் அவசியத்தை எடுத்துரைத்ததையடுத்து இத்தினம் முதன்முதலில் அங்கீகரிக்கப்பட்டது.
- ஆரோக்கியமான தைராய்டு செயல்பாடு மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சியைப் பராமரிக்க அயோடினின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- அயோடின் குறைபாடு குழந்தைகளில் முன் கழுத்துக் கழலை, ஹைப்போ தைராய்டிசம், மனநலக் குறைபாடு மற்றும் வளர்ச்சியில் தாமதங்களை ஏற்படுத்தும்.

- உலகளவில் சுமார் 2 பில்லியன் மக்கள் போதுமான அயோடின் உட்கொள்ளாதலால் பாதிக்கப் படுகின்றனர் என்ற நிலையில் அயோடின் கலந்த உப்பின் பயன்பாடு இந்த கோளாறுகளைத் தடுக்க உதவுகிறது.

## சர்வதேச திக்குப் பேச்சு விழிப்புணர்வு தினம் 2025 - அக்டோபர் 22




- இது முதன்முதலில் 1998 ஆம் ஆண்டில் சர்வதேச திக்குப் பேச்சு சங்கம் (ISA), சர்வதேச சரளப் பேச்சு சங்கம் (IFA) மற்றும் ஐரோப்பிய திக்குப் பேச்சு சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றால் நிறுவப்பட்டது.
- சரளமாகப் பேசுவதில் இடையூறுகள் ஏற்படும் பேச்சுக் கோளாறான திக்குப் பேச்சு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "A Diverse Stuttering Community – Meeting Challenges With Strengths" என்பதாகும்.

## சர்வதேசப் பனிச் சிறுத்தை தினம் 2025 - அக்டோபர் 23

- இந்தத் தினம் 2024 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப் பட்டது.
- ஒட்டு மொத்தச் சுற்றுச்சூழல் அமைப்பில் பனிச் சிறுத்தையின் பங்கைக் கருத்தில் கொண்டு, பனிச்சிறுத்தையைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளுக்கு ஒரு ஆதரவாக சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இந்த நாள் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பனிச்சிறுத்தை (பாந்தெரா அன்சியா) ஆசியாவின் உயரமான மலைப் பகுதிகளில் காணப்படுகிறது.
- இந்தியாவானது இந்த நாளை '#23for23' என்ற கருத்துருவில் ஒரு தனித்துவமான முன்னெடுப்புடன் அனுசரித்தது.


International
Snow Leopard
Day
23rd October
LiFE
#23for23: 23 Minutes for Snow Leopards
A global digital campaign that invites individuals, institutions, and communities worldwide to dedicate **23 minutes of physical activity** — such as walking, running, cycling, yoga, or stretching — to honour the snow leopard, the ultimate mountain athlete.